தமிழ் மக்களின் வாக்குரிமையை வேட்டையாடும் எஸ்.ஐ.ஆர்: நாளை குடியுரிமைக்கும் ஆபத்து!

பா.ஜ.க., அ.தி.மு.க.வை களத்தில் இருந்து விரட்டியடிப்போம்!

கண்டன ஆர்ப்பாட்டத்தில் – கனிமொழி கருணாநிதி எம்.பி. உரை!

தூத்துக்குடி, நவ. 12 -

எஸ்.ஐ.ஆர் என்ற தீவிர சிறப்பு வாக்காளர் திருத்தத்தை அவசர அவசரமாக நடத்துவதை கண்டித்தும், ஒன்றிய பாஜக அரசின் கைப்பாவையாக செயல்படும் தேர்தல் ஆணையத்தையும் கண்டித்து நேற்று (11.11.2025 - செவ்வாய்கிழமை), தூத்துக்குடி வி.வி.டி சிக்னல் அருகில், தூத்துக்குடி வடக்கு மற்றும் தெற்கு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினரும், திமுக துணைப் பொதுச்செயலாளரும், திமுக நாடாளுமன்றக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் கலந்துகொண்டு கண்டன உரையாற்றினார்.

கூட்டத்தில் கனிமொழி கருணாநிதி எம்.பி. பேசியதாவது:-

“இந்த எஸ்.ஐ.ஆரை எதிர்த்து ஏன் திராவிட முன்னேற்றக் கழகமும், அதன் கூட்டணிக் கட்சிகளும் ஆர்பாட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறது? இதுவரைக்கும் இந்த வாக்காளர்பட்டியல்சீராய்வுசெய்ததில்லையா என்றால் செய்திருக்கிறார்கள். ஆனால் இதற்கு முன்னர், சீராய்வு செய்யப்பட்டதோடு 2002 இல் 6 மாதம் அதற்கு அவகாசம் தரப்பட்டது. ஆனால் இன்று ஒரு மாதத்தில் ஃபார்ம் கொடுக்க வேண்டும், அதை நிரப்பி உடனடியாக கொடுக்க வேண்டும், உங்கள் பெயர் வாக்காளர் பட்டியலில் விடுபட்டால் அதை மீண்டும் சேர்ப்பதற்கு பல பிரச்சினைகள் என்ற நிலையெல்லாம் அப்போது இல்லை.

தேர்தல் அடுத்த ஆண்டு நடைபெற இருக்கிறது. இத்தனை மாதங்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள் என்று தெரியவில்லை. இப்போது கடைசி நேரத்தில் வந்து இந்த எஸ்.ஐ.ஆர். கொண்டுவருகிறார்கள்.

ஆங்கிலத்தில் இதற்கு ஸ்பெஷல் இன்டென்சிவ் ரிவிஷன் என்று இருந்தாலும், உண்மையிலேயே பாஜகவைப் பொறுத்தவரை இது ஸ்பெஷல் எக்ஸ்குளுசிவ் ரிவிஷன். அதாவது வாக்காளர் பட்டியலில் இருந்து பெயர்களை நீக்குவதற்கான சீராய்வுதான் இது.

பா.ஜ.க.வுக்கு எதிரானவர்களின் பெயர்களை நீக்க சதித் திட்டம்!

யார் யாருடைய பெயரையெல்லாம் வாக்காளர் பட்டியலில் இருந்து எடுக்கிறார்கள்? பிகாரில், ஹரியானாவில், மகாராஷ்டிராவில் யாரெல்லாம் பாஜகவுக்கு ஓட்டுப் போட மாட்டார்களோ அவர்களின் பெயரையெல்லாம் எடுப்பதற்காகத்தான் இதை அவர்கள் செய்கிறார்கள். இதில் மிகப் பெரிய ஆபத்து இருக்கிறது.

சில நாடுகளில் சிங்கப்பூர் போன்ற நாடுகளில் தொடர்ந்து மூன்று முறை தேர்தலில் வாக்களிக்கவில்லை என்றால், அதற்கான சரியான காரணம் சொல்லப்படவில்லை யென்றால், அவர்கள் அந்த நாட்டின் பிரஜைகளாக இருக்க உரிமை கிடையாது.

இன்று வாக்காளர் பட்டியலில் இருந்து உங்கள் பெயரை எடுத்து விட்டு நாளைக்கு இப்படி ஒரு சட்டம் கொண்டுவந்தார்கள் என்றால்... நாம் இந்திய குடிமக்களாக இருப்பதற்கான உரிமை இருக்குமா அல்லது பறிக்கப்படுமா என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

வாக்குரிமை என்பது அரசியல் சாசனத்திலே நமக்கு தரப்பட்டிருக்கிற அடிப்படை உரிமை. உங்கள் பெயர் வாக்காளர் பட்டியலில் இல்லை என்றால் அந்த உரிமை எப்படி கிடைக்கும்?

வாக்களிக்கும் உரிமையை பறிக்கக்கூடிய முயற்சி!

அந்த உரிமை இல்லாமல் போய் நாளை தேர்தலில் ஓட்டு போட முடியாமல் போனால், வாக்காளர் அடையாள அட்டையே இல்லாமல் போனால்... நீ இந்தியாவின் குடிமகன்

என்று எப்படி சொல்லிக் கொள்கிறாய் என்று சொன்னால் நாளை ரேஷன் கார்டு வாங்க முடியுமா? பாஸ்போர்ட் வாங்க முடியுமா? பிள்ளைகளை பள்ளியில் சேர்க்க முடியுமா?

இங்கே பேசியவர்கள் சொன்னார்கள் பிகாரில் மட்டும் 68 லட்சம் இஸ்லாமியர்கள், தலித் மக்கள், பெண்களின் ஓட்டுகள் நீக்கப்பட்டிருக்கிறது என்று. இங்கே பாஜகவுக்கு தமிழ் நாட்டில் யாரும் ஓட்டுப் போட தயாராக இல்லை. அப்படிப்பட்ட சூழலில் இங்கேயும் லட்சக்கணக்கான பெயர்களை வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கிவிட்டு... நம்முடய முதலமைச்சர் எதிர்த்து போராடி வருகிறாரே, டிலிமிட்டேஷன் அதை கொண்டுவரும் அபாயமும் இருக்கிறது. இங்கே இவ்வளவு வாக்குகள்தானே இருக்கிறது. எதற்காக 39 நாடாளுமன்றத் தொகுதிகள் என்று கேட்டு தொகுதிகளைக் குறைத்தால் என்ன செய்வோம்? இதையெல்லாம் சிந்தித்துதான் இன்று நாம் போராடிக் கொண்டிருக்கிறோம்.

நம்முடைய உரிமைகளை, நம்முடைய பிரதிநிதிகளின் உரிமைகளை பறிப்பதற்கு தமிழ்நாட்டின் உரிமைகளை தொடர்ந்து பறிப்பதுதான் பாஜக என்பதை நாம் மறுக்கவும் முடியாது, மறக்கவும் முடியாது.

இப்படிப்பட்டவர்கள் இந்த எஸ்.ஐ.ஆர். ஐ அவசர கதியாக செயல்படுத்துகிறார்கள். ஃபார்ம் கொடுக்க முடியவில்லை... வாங்க அவகாசம் இல்லை... யார் எந்த பட்டியலில் முன்பு இருந்தார்கள் என்று தெரியாது... முன்பு இருந்த சில தொகுதிகள் இப்போது இல்லை...இத்தனை குழப்பங்களுக்கும் மத்தியில் தேர்தலுக்கு முன்னாலே ஏன் இதை செய்கிறார்கள் என்றுதான் நாம் கேட்கிறோம்.

சிறந்த அடிமை என நிரூபிக்கிறார் எடப்பாடி!

சில இடங்களில் முதலாளிகளை எதிர்த்து கேள்வி கேட்க நியாயமாக ஒருத்தன் வருவான்... அவன் கேள்வி கேட்டுக் கொண்டிருக்கும் போது நடுவில் ஒருவன் புகுந்து நான் தான் முதலாளிக்கு சிறந்த அடிமை என்று சொல்லக் கூடிய வகையிலே, முதலாளி பதில் பேசுவதற்கு முன்பே அவருக்காக வந்து இடையில் புகுந்து அடிப்பான், சத்தம் போடுவான்.

அதுமாதிரி... பாஜகவை எதிர்த்து திமுக நமது கூட்டணிக் கட்சிகள் வழக்கு போட்டால்... இந்த எஸ்.ஐ.ஆர். வேண்டுமென்று ரொம்ப நல்லவர் வழக்கு போட்டிருக்கிறார். முதலாளிக்கு நான் தான் சிறந்த அடிமை என்று சொல்லிக்கொள்வதற்காக எடப்பாடி பழனிசாமி ஒரு வழக்கை போட்டிருக்கிறார்.

தமிழ்நாட்டு மக்களின் வாக்குரிமை திருடக் கூடிய பறிக்கக் கூடிய எஸ்.ஐ..ஆர். எங்களுக்கு வேண்டும் என்று சொல்லக் கூடிய ஒரு நிலை இங்கே இருக்கிறது.

நாம் தலைநிமிர்ந்து சொல்லிக் கொள்ள முடியும், மிகப்பெரிய ஒரு படை இருக்கிறது, அதை சரிபார்ப்பதற்கு. ஆனாலும், யாரை எதிர்த்து நாம் போராடிக் கொண்டிருக்கிறோம் என்பதை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

உரிமைக்காகப் போராடி எதிரிகளை விரட்டிடுவோம்!

மக்களுடைய உரிமைகளை பறிக்கக் கூடியவர்களை, மக்களுடைய பேச்சுரிமையை, மொழியுரிமை தடுக்கக் கூடியவர்களை, மதத்தின் ரீதியாக சாதியின் ரீதியாக மொழியின் ரீதியாக மக்களுக்கு எதிராக தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறவர்களை எதிர்த்து நாம் போராடிக் கொண்டிருக்கிறோம் என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

அரசு உங்களுக்கு அளிக்கும் எத்தனையோ திட்டங்கள் உங்களை வந்து சேர வேண்டும் என்று சொன்னால் வாக்காளர் அடையாள அட்டை அவசியம் என்பதை புரிந்துகொள்ள வேண்டும். அதனால், அத்தனை பேரும் சேர்ந்து நம்முடைய உரிமைகளுக்காக போராடுவோம்... இதை எதிர்த்து நிற்பவர்களை களத்தில் இருந்து விரட்டியடிப்போம்”.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. உரையாற்றினார்

உடன், காங்கிரஸ் கமிட்டி துணைத் தலைவர் ஏ.பி.சி.வி சண்முகம், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜி.வி.மார்கண்டையன், .எம்.சி. சண்முகையா, ஊர்வசி அமிர்தராஜ், மதிமுக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிப்பிப்பாறை ரவிச்சந்திரன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நிர்வாகக் குழு உறுப்பினர் சம்பத், மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, மாநகர திமுக செயலாளர் ஆனந்த சேகரன் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்!.

சென்னை தெற்கு மாவட்டக் கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு சார்பாக

SIR குறித்த ஆலோசனைக் கூட்டம்; அமைச்சர் மா.சுப்பிரமணியன் கருத்துரை!

மாவட்ட அமைப்பாளர் சைதை சாதிக் தலைமை!

சென்னை, நவ.12-

சென்னை தெற்கு மாவட்ட கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு சார்பில் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தம் (SIR) குறித்த ஆலோசனைக் கூட்டம் இன்று நடைபெறுகிறது. இக்கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் பங்கேற்று கருத்துரை வழங்குகிறார். மாவட்ட அமைப்பாளர் சைதை சாதிக் தலைமை தாங்குகிறார்.

இது குறித்து சைதை சாதிக் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

ஒன்றியத்தில் ஆட்சி செய்துகொண்டிருக்கும் ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசு தேர்தல் ஆணையம் மூலமாக சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தம் (SIR) என்கிற பெயரில் நம்முடைய வாக்குரிமையை பறிக்கின்ற சதியை குறிப்பாக சிறுபான்மை சமுதாய மக்களின் வாக்குகளை பறிக்கத் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே பீகாரில் பா.ஜ.க.வினரின் தோல்வி உறுதியானதால், வாக்காளர்களையே நீக்க துணிந்தார்கள்,

அதே நோக்கத்தை தமிழ் நாட்டில் நடத்தலாம் என்று பகல் கனவு காண்கிறார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவார்ந்த கருத்துரையையேற்று மக்களாட்சியின் மாண்பை காக்கும் பொருட்டு, சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தத்தை எதிர்க்கொள்வது குறித்து, சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க. சிறுபான்மை நல உரிமைப் பிரிவு சார்பில் வரும் இன்று (12.11.2025 - புதன்கிழமை) காலை 10.00 மணியளவில் சைதாப்பேட்டை, ராஜ் தியேட்டர் அருகில் அமைந்துள்ள எஸ்.பி.எஸ் திருமண மண்டபத்தில் நடைபெறும் ஆலோசனைக் கூட்டத்தில் அமைச்சர், மாவட்ட கழக செயலாளர் மா.சுப்பிரமணியன் ஆலோசனை வழங்கி உரையாற்றுகிறார்.

ஆகவே கழக நிர்வாகிகள் அனைவரும் இதில் பங்கேற்று தங்களது கருத்துக்களை பதிவு செய்திடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு சைதை சாதிக் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை சார்பில்

கோவளம் கடற்கரை - தொடர்ச்சியாக 5வது முறையாக ‘நீலக்கொடி’ சான்றிதழைப் பெறுகிறது!

சென்னை, நவ. 12 -

தேசிய பொறுப்பாளர், நீலக்கொடி சான்றிதழ் வழங்கும் நிறுவனத்திடமிருந்து, செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியருக்கு வந்த கடிதத்தில், செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள கோவளம் கடற்கரை தொடர்ந்து ஐந்தாவது ஆண்டாக மதிப்புமிக்க சர்வதேச நீலக்கொடி சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்.

கடற்கரைகளில் நிலைத்தகு சுற்றுலாவை ஊக்குவிக்கவும், நீலப்பொருளாதாரத்தை மேம்படுத்தவும் கடற்கரைகளுக்கு நீலக்கொடி சான்றிதழ் எனப்படுகின்ற உலகத்தர அங்கீகாரம் டென்மார்க்கைச் சார்ந்த சுற்றுச்சூழல் கல்வி அறக்கட்டளையால் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வங்கீகாரத்தினைப் பெற கடற்கரையின் தூய்மை, அதன் பாதுகாப்பு, சுற்றுச்சூழல் பராமரிப்பு, நீரின் தரம் மற்றும் நிலைத்தகு சுற்றுலா வசதிகள் உள்ளிட்ட 33 சர்வதேச தர நிலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். அவ்வாறு தகுதி பெற்ற கடற்கரைகளுக்கு மட்டுமே இச்சான்றிதழ் வழங்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில், செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள கோவளம் கடற்கரை கடந்த 2021ம் ஆண்டு செப்டம்பர் 21 அன்று நீலக்கொடி சான்றிதழைப் பெற்று தமிழ்நாட்டின் முதல் நீலக்கொடிக் கடற்கரையாகத் திகழ்ந்து வருகிறது. ஒவ்வொரு வருடமும் நீலக்கொடிச் சான்றிதழ் பெற்றுள்ள கடற்கரைகள் அச்சான்றிதழைப் புதுப்பிக்க வேண்டியுள்ள நிலையில், இக்கடற்கரைகளுக்கு நீலக்கொடி சான்றிதழ் வழங்க தேசிய குழு மற்றும் சர்வதேச குழு என இரண்டு குழுக்களால், மேற்கூறிய 33 சர்வதேச தர நிலைகளும் பூர்த்தி செய்யப்பட்டு தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகின்றனவா என்பதனை ஆய்வு செய்த பின்னர், அக்குழுக்களின் பரிந்துரையின்படி இச்சான்றிதழ் வழங்கப்படுகிறது. இத்தகைய சிறப்புமிகு இச்சான்றிதழினைக் கோவளம் கடற்கரை தொடர்ச்சியாக ஐந்தாவது முறை பெற்றிருப்பது தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்க்கும் நிகழ்வாக அமைந்துள்ளது.

இங்கு வரும் பார்வையாளர்களுக்கு மூங்கில் நிழற்குடைகள், சாய்வு நாற்காலிகள், உடைமாற்றும் அறைகள், கழிவறைகள், மாற்றுத்திறனாளிகளுக்கான மிதவை ஊர்திகள் போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டு உள்ளன. பார்வையாளர்களின் பாதுகாப்பிற்காக, கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. அவசர அழைப்பிற்கு உயிர் காக்கும் காவலர்கள், கண்காணிப்பு கோபுரத்தில் நிறுத்தப்பட்டு உள்ளனர். கடற்கரையில் காலை 6:00 மணி முதல் மாலை 6:00 மணி வரை பார்வையாளர்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

இக்கடற்கரைக்கு, கடந்த 2024 25 ம் ஆண்டு மட்டும் சுமார் ஐந்தரை லட்சம் பேர் வரை வருகை புரிந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

கோவளம் கடற்கரை நீலக்கொடி சான்றிதழ் பெற்ற பின்னர், மக்களிடையே பெறும் வரவேற்பைப் பெற்றுள்ள நிலையில், அதனைத் தொடர்ந்து தமிழ்நாட்டில், சென்னை மெரீனா கடற்கரை, கடலூர் வெள்ளிக் கடற்கரை, நாகை மாவட்டத்தின் காமேஷ்வரம் கடற்கரை மற்றும் இராமநாதபுரம் மாவட்டத்தின் அரியமான் கடற்கரை போன்ற கடற்கரைகளுக்கு நீலக்கொடி சான்றிதழ் பெறுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு அவை நிறைவடையும் தருவாயில் உள்ளன.

மேலும், தமிழ்நாடு அரசு, மாநிலத்தின் அனைத்து முக்கியமான கடற்கரைகளுக்கும், குறிப்பாக கடலூர் மாவட்டத்தில் உள்ள சாமியார்பேட்டை கடற்கரை, தூத்துக்குடி மாவட்டம் குலசேகரப்பட்டினம் கடற்கரை, விழுப்புரம் மாவட்டம் கீழ்புதுப்பட்டு கடற்கரை, சென்னை மாவட்டம் பாலவாக்கம் கடற்கரை, திருவான்மியூர் கடற்கரை மற்றும் உத்தண்டி கடற்கரைகளுக்கு நீலக்கொடி சான்றிதழ் பெறுவதற்கான நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

நெஞ்சம் நெகிழ்ந்தேன் என் தலைவா!

புதுக்கோட்டை மாவட்டம், கீரனூர் மூகாம்பிகை பொறியியல் கல்லூரித் திடலில், (10.11.2025) காலை புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல், முடிவுற்ற திட்டப் பணிகளைத் திறந்துவைத்தல் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், பொது மக்கள் மற்றும் கழக உடன்பிறப்புகளின் விண்ணைப் பிளக்கும் கையொலி மகிழ்ச்சி ஆரவாரத்துக்கிடையில், குறித்த நேரத்தில் வந்து கலந்து கொண்ட தமிழ்நாட்டின் தன்னேரிலா முதலமைச்சர், நல்லாட்சி நாயகர், கழகத் தலைவர், அவர்கள், கடந்த நான்கரை ஆண்டுகளில் புதுக்கோட்டை மாவட்டத்தில், 14, 282 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் மற்றும் வளர்ச்சித் திட்டப் பணிகள் நிறை வேற்றப்பட்டுள்ள நிலையில், 767 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான புதிய பணிகளுக்கும் அடிக்கல் நாட்டியும், மேலும் புதிய திட்டங்களைப் புதுக்கோட்டை மாவட்டத்திற்கு அறிவித்தும் மிகச் சிறந்ததோர் உரை நிகழ்த்தி, பயனாளிகளுக்கு நலத்திட்டங்களை வழங்கி அனைவரையும் மகிழ்ச்சியில் திளைக்கச் செய்தார்.

விழா நிறைவுற்றதும் முதல்வர் அவர்கள், மேடையில் இருந்து நேராகக் காருக்குச் செல்லப் போகின்றார் என்று அனைவரும் எதிர்பார்த்த நிலையில், திடீரென்று பார்வையாளர் வரிசையை நோக்கி முதல்வர் அவர்கள் வரப்போகும் அறிகுறி தென்பட, கழக முதன்மைச் செயலாளர், அமைச்சர் பெருந்தகை, அருமை அண்ணன் கே.என்.நேரு அவர்கள் என் அருகே விரைவாக வந்து, “ கவிதை , உங்களைப் பார்க்கத்தான் முதல்வர் வருகின்றார் “ என்று இன்ப அதிர்ச்சியாக என்னிடம் கூறிட, தலைவர் அவர்களுக்குப் பின்னாலேயே வந்த இனிய சகோதரர், அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் அவர்களும் “தலைவர் உங்களைப் பார்ப்பதாக உங்கள் பெயரைக் குறிப்பிட்டுச் சொல்லித்தான் கீழே இறங்கி வருகிறார்கள்” என்று மகிழ்ச்சி கலந்த உற்சாகத்துடன்,அண்ணன் நேரு அவர்கள் கூறிய செய்தியை உறுதிப்படுத்திட, சில நொடிகளில் மேடைக்கு எதிரே கீழே நின்றுகொண்டிருந்த என் அருகிலேயே தமிழின முதல்வரான, கழகத் தலைவர் தளபதி அவர்கள் நெருங்கிவந்து,

“ கவிதை ... எப்படி இருக்கீங்க? நலமா? “ என்று தாயன்பு ததும்பிடக் கேட்டாரே, அந்த நொடிப்பொழுதில் தலைவர் கலைஞர் அவர்களே என் கண்ணெதிரில் தோன்றியதாக உணர்ந்து, என் சிந்தை, உடல்அணு ஒவ்வொன்றும் சிலிர்த்துப் போனேன்!

எந்த நாட்டில், எந்த இயக்கத்தில் எந்த அமைப்பில், இப்படியோர் வியத்தகு நிகழ்ச்சி நடக்கும்?

கழகத்திற்காக எழுதியும், பேசியும், களமாடியும் கடமை வீரனாகப் பணி செய்து வரும் கவிஞனாகிய தன் உடன்பிறப்பின் பெயரைக் குறிப்பிட்டுச் சொல்லி, அரசு விழா மேடைக்கு எதிரில் பல்லாயிரக்கணக்கில் நிரம்பியுள்ள மக்களோடும், கழகத் தோழர்களோடும் எதிர் வரிசையில் அமர்ந்திருப்பவரைத் தேடிச் சென்று நலம் விசாரிக்கும் இந்தக் குடும்பப்பாசம் நிறைந்த தலைமைப் பண்பினை, இந்த உலகத்தில் எங்கே எவரிடத்தில் காண இயலும்?

மேடையின் அருகில் இருந்தபடி ஓடிவந்த அன்பு உடன்பிறப்பு பரணி கார்த்திகேயன் அவர்களும், பாசமிகு பந்தல்சிவா அவர்களும், புதுக்கோட்டை மாநகராட்சியின் துணைமேயர் அண்ணன் எம். லியாகத் அலி அவர்களும்,

“தலைவர் உங்கள் பெயர் சொல்லி உங்களைப் பார்க்கத்தான் இங்கே வந்து கொண்டிருக்கிறார்” என்று கூறியதைக் கேட்டதும் மென்மேலும் என் மகிழ்ச்சி பன்மடங்கு கூடியது.

இந்தியாவிலேயே ஈடு, இணை இல்லாத தன்மான முதலமைச்சராகப் பீடுநடை போடும் வணக்கத்திற்குரிய கழகத் தலைவர் அவர்கள், “ கவிதை நலமா?” என்று கேட்டும், “சென்று வருகிறேன் கவிதை “ என்று கனிவு நிறைந்த முகத்துடன் விடைபெற்றும், மக்கள் வெள்ளத்திற்கிடையே என்மீது பொழிந்த அன்புமழைக்கு ஒப்பாக இந்த உலகத்தில் நான் எதைச் சொல்ல முடியும்?

பச்சைமா மலைபோல் மேனி!
பவளவாய் கமலச் செங்கண்!
அச்சுதா! அமரர் ஏறே!
ஆயர்தம் கொழுந்தே! என்னும்
இச்சுவை தவிர, யான்போய்
இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்!
அரங்கமா நகரு ளானே!

என்னும் ஆழ்வார் பாடல்தான் அந்தக் கணப்பொழுதில் என் நினைவுக்கு வந்தது. அதுவும் அந்தப் பாடலைப் பாடியவர் பெயரே தொண்டரடிப்பொடி ஆழ்வார் தான்! என்ன பொருத்தம் பார்த்தீர்களா?

தூரத்தில் அமர்ந்திருக்கும் தோழனையும் அருகழைத்துத் தன் தோளில் சாய்த்து வாழ்த்தி மகிழும் தூய தலைவனின் விழியசைவில் வினைமுடிக்கும் தொண்டனாக இருப்பதை விடத் தித்திக்கும் பேறு வகை எத்திக்கும் வேறு, எங்குக் கிடைக்கும்?

தமிழ்ப் பெருங்கடல் ந.மு.வேங்கடசாமி நாட்டார் அவர்களின் உரையுடன் கூடிய

இளங்கோவடிகளின் சிலப்பதிகாரம் நூலை ஆருயிர்த் தலைவருக்கு வழங்கி மகிழ்ந்தேன்.

வரலாறு நெடுகிலும் புகழ்கொண்டு
வரும் களத்திலும் நீவென்று
வாகை சூடி எமை ஆண்டு
வாழ்க தலைவா! பல்லாண்டு!

கவிச்சுடர்
கவிதைப்பித்தன்